# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

**2008. மே மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது,

கொழும்பு 5. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 12.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2008ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச. வ. ஒ. (கூட்) 10/2004

### வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப் பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களை யும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென வாதுவவில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ; முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தித் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தி மன்றத்தின் தற்போது உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் "வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தி மன்றம்" என்னும் மகுடத்தின் கீழும், பெயரின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாக இருத்தல் வேண்டும். (இது வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) அத்துடன் அப் பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக் கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியவாறு அதை மாற்றவும், அது பூழுத்ததுவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) வாதுவ விவேகாராம விகாரையின் நோக்கங்களுக் காகத் தேவைப்படும் கட்டிடங்களை நிர்மாணித்தலும், உபகரணமளித்தலும், பேணுதலும் அத்துடன் புகாமைசெய்தலும் ;

(ஆ) பௌத்த மதத்தைச் சேர்ந்தோராகவும் மன்றத்தின் உறுப் பினராகவுமுள்ள வறியோருக்கும், அநாதைகளுக்கும் மற்றும் நோயாளர்களுக்கும் மருத்துவ வசதிகள், ஆடைகள் மற்றும் உறைவிடத்திற்கு ஏற்பாடுசெய்தல் ;

(இ) தங்களது வாழ்க்கைத் தொழிற்கல்வித் திறமைகளை அபிவிருத்தி செய்வதனையும் சுயதொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்வதனையும் இயலச்செய்வதற்காக பௌத்த மதத்தினராகவும் மன்றத்தின் உறுப்பினர் களாகவுள்ளவுமுள்ள இளைஞர்களுக்கென வாழ்க் கைத் தொழிற்கல்விப் பயிற்சிநிலையங்களையும் நிறு வனங்களையும் தாபித்தலும், அவற்றைத் தாபித்தலில் உதவியளித்தலும் அத்துடன் பேணுதலும் ;

(ஈ) பிக்குமார்களுக்கு பௌத்த தர்மத்திலும் பௌத்த விழுமியங்களிலும் கல்விபுகட்டலும் மற்றும் அவற்றுக்கிணங்க அவர்கள் தங்கள் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதை ஊக்குவித்தலும் ;

(உ) பௌத்த சமுதாயத்தில் சமாதானத்தை மேம்படுத்து தலும் மத, இன, இனத்துவ மற்றும் சாதி ரீதியான ஒற்றுமையைப் பேணுதலும் ;

(ஊ) பௌத்த மதத்தினருக்காக தர்மப்பாடசாலைகள், மற்றும் ஆரம்பப் பாடசாலைகள் என்பவற்றைத் தாபித்தலும் பேணுதலும் ;

(எ) பௌத்த மதத்தினருக்கிடையே அறிவைப் பரப்புவதற்காக நூலகங்கள், தகவல் நிலையங்கள் மற்றும் மூலவள நிலையங்களைத் தாபித்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் மேற்படி குறிக்கோள்களை முன்னேற்றும்முகமாக கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், வகுப்புக்கள், விவாதங்கள், மாநாடுகள் அல்லது வேறு ஏதேனும் செயற்பாடுகள் என்பவற்றை ஊக்குவித்தல், ஏற்பாடு செய்தல், ஒழுங்கமைத்தல் மற்றும் நடாத்துதல் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு கழகங்கள், ஒழுங்கமைப்புகள் அல்லது சங்கங்களுடன் கூட்டுச்சேருதல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை, கட்டுப்பாடு மற்றும் நிருவாகம், என்பன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்குமமைவாக, தவிசாளராக இருக்க வேண்டிய போஷகருக்கும் மற்றும் அத்தகைய விதிகளுக்கிணங்கக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களையுங்கொண்ட முகாமைச் சபையொன்றுக்கு (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உரித்தாக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையானது, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் பணிப்பாளர் சபையாதல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நடாத்தப் படும் வரை அது பதவிவகித்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் போஷகர்.

5. (1) அப்போதைக்கு வாதுவ விவேகாராம விகாரையின் விகாராதிபதியாக பதவிவகிப்பவர் கூட்டுத்தாபனத்தின் போஷகராக இருத்தல் வேண்டும் ; இவர் கூட்டுத்தாபனத்தின் தவிசாளராகச் செயலாற்றுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் போஷகர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக உள்ளவிடத்து, போஷகரின் மாணாக்கருள் சிரேட்ட மாணவர் அவரது இடத்தில் செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன், அவர் போஷகரின் எல்லாக் கடமைகளையும் புரிதலும் வேண்டும்.

உறுப்பாண்மை பற்றிய இடாப்பு.

6. (1) சபை, இச்சட்டம் தொடங்கும் தேதியில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராயிருக்கின்ற ஒவ்வொராளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக அதன் பின்னர் உரியமுறையில் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொராளும் அவருடைய பெயரைப் பதிவுசெய்துகொள்ள வேண்டிய இடாப்பொன்றைப் பேணச் செய்வித்தல் வேண்டும்.

(2) இடாப்பானது பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வோர் உறுப்பினரதும் பெயர், விலாசம் மற்றும் தொழில் ;

(ஆ) இடாப்பில் உறுப்பினரின் பெயர் எத்தேதியன்று பதிவுசெய்யப்பட்டதோ அத்தேதி ;

(இ) எவரேனுமாள் எத்தேதியில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராவதிலிருந்து இல்லாதொழிந்தாரோ அத்தேதி.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

7. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையுமான அத்தகைய எல்லாச்

செயல்களையும் கருமங்களையும் மற்றும் காரியங்களையும் செய்யவும், புரியவும் அத்துடன் நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் பின்வரும் தத்துவங்களும் அடங்கும் :-

(அ) பணத்தை திரட்டுதல் மற்றும் காசாகவோ அல்லது பொருளாகவோ மானியக்கொடைகளையும் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான அல்லது அதனால் வைத்திருக்கப்படும் காணியில் ஏதேனும் கட்டடத்தை அல்லது கட்டுமானத்தை நிறுவுதல் அல்லது நிறுவச் செய்வித்தல் ;

(இ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் அத்துடன் வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், குறிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் அத்துடன் வழங்குதல் ; அத்துடன் ஏதேனும் வங்கியில் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்தல், பேணுதல் மற்றும் மூடுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை, சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலிடுசெய்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும் புரிதலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்தலும், அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குக் கொடுத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

8. (1) காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில், அக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளின் மூலம் பின்வரும் எல்லாக் கருமங்கள் அல்லது அவற்றில் ஏதாவதொரு கருமம் தொடர்பாக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினரால் கொடுபடற்பாலதான கட்டணங்களும், அவர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது பதவிவிலகலும் ;

(ஆ) சபையைத் தெரிவுசெய்தல், சபையின் பதவி தாங்குநர்கள் பதவியைத் துறத்தல் அல்லது அவர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் சபையின் தத்துவங்களும், கடமைகளும் மற்றும் சபை கொண்டு நடாத்தப்படுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனம், அவர்களைத் தொழிலுக்கமர்த்துதல் அத்துடன் அவர்களைப் பதவிவிலக்குதல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை அத்துடன் அவர்களுக்கு ஊதியம் கொடுத்தல் ;

(ஈ) சபை, கூட்டுத்தாபனம் அல்லது அதன் ஏதேனும் உபகுழு என்பவற்றின் கூட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, கூட்டங்களைக் கூட்டுதல், நடாத்துதல், வெற்றிடங்களை நிரப்புதல் அத்தகைய கூட்டங்களுக்கான அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல், அதற்கான கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் ;

(உ) சபையினதும் அத்துடன் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் உட்பிரிவு (1) இன் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள், அல்லது மானியக்கொடைகள் என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்குமேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை மறுசீரமைக்கும், மேம்படுத்தும், அபிவிருத்தி செய்யும் அத்துடன் பாதுகாக்கும் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனமானது ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கு அல்லது காப்பு நிதியத்தை தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் பணமும் ஆதனமும் அது எவ்வாறு பெறப்பட்டு இருந்தாலும்சரி இதன்கண் தரப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் எந்தவொரு பாகமும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குப் பங்கிலாபம், மிகையூதியம் என்றவகையில் அல்லது வேறெந்தவகையிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கணக்குகளும் கணக்காய்வும்.

10. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒருதடவையாது சபையினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது —

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று.

என்று பொருள்படும்.

11. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்த நாளில் மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

மன்றத்திலிருந்து செலுத்தற்பால உள்ளவையும் அதற்குச் செலுத்தற்பாலுள்ளவையுமான பணங்கள்.

12. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது குத்தகைச் சாதனத்தின்மீது அல்லது அதன் பயனைக் கொண்டு அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் மீது அல்லது அதன் பயனைக்கொண்டு அல்லதுவேறு வகையாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும், கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் (நம்பிக்கைப்பொறுப்புகள் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும், தொடர்புபட்ட கையாளுகைச் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு எப்போதும் அமைவாக) அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

13. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தவிசாளரினதும் அத்துடன் பொருளாளரினதும் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் இருவரும் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**14.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து மீதியாகக்கூடியவாறான உறுப்பாண்மைக் கட்டணத்தொகைக்கு மேலாக எவ்வுதவுத்தொகையையும் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது.

*கலைக்கப்பட்டதன்மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**15.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கொடுத்துத்தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது ; ஆனால் அந்தக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளவையுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**16.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் குழுவினது உரிமைகளையேனும் அல்லது கூட்டுத்தாபனத்தினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வொராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்